

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக, அண்ணா காவல் அரங்க மைதானத்தில் இரண்டாவது மாபெரும் புத்தகத் திருவிழா 2024 னை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து, அரங்கினை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கி.சண்முகம், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் வெ. வெங்கடேஷ், துணை மேயர் குமரகுருநாதன், ஆகியோர் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மகாலிங்கம் பொறியியல் கல்லூரியில் தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார். அருகில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.செல்வநாயகம், பொள்ளாச்சி சார் ஆட்சியர் திருமதி. கேத்தரின் சரண்யா ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தலைமை! செம்மொழி பூங்காவில்

# மலர்க் கண்காட்சி - இன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே. சேகர் பாபு முன்னிலை!

சென்னை,பிப்.10-

வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெறும் மலர்க் கண்காட்சியை சென்னை, செம்மொழிப் பூங்காவில் இன்று (10.02.2024) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் , இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

சென்னை கத்தீட்ரல் சாலையில் உள்ள செம் மொழி பூங்காவில் இன்று 10.2.2024 12 லட்சம் பூக்களுடன் பிரம்மாண்ட மலர் கண்காட்சி தொடங்குகிறது. சென்னையில் இதற்கு முன்பு 2 முறை மலர் கண்காட்சி நடைபெற்று உள்ளது. அப்போது கலைவாணர் அரங்கவளாகத்திலேயே இந்த மலர் கண்காட்சி நடத்தப் பட்டுள்ளது.

ஆனால் இந்த முறை இயற்கை சூழலில் செம் மொழி பூங்காவில் மலர் கண்காட்சியை நடத்துவதற்கு தமிழக அரசின் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இதன்படி இன்று 10.2.2024 தொடங்கும் மலர் கண்காட்சி ஒருவார காலம் நடைபெறும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. ஊட்டி, கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்து சுமார் 12 லட்சம் பூக்களை கொண்டு வந்து பிரமாண்ட மான முறையில் மலர் கண்காட்சியை நடத்து வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு 8 ஏக்கர் பரப்பளவில் இந்த செம்மொழி பூங்கா உருவாக்கப்பட்டது. இந்த மலர் கண்காட்சியில் வித விதமான பூக்களை கொண்டு பல்வேறு உருவங்கள் வடிவமைக்கப்படுகிறது. யானை, மயில், கொக்கு உள்ளிட்ட பறவைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. இதே போன்று18 வகை யான உருவங்களை உருவாக்குவதற்கும் திட்ட மிடப்பட்டு அந்த பணிகள் இறுதி கட்டத்தை எட்டி உள்ளன. இந்த மலர் கண்காட்சியை பொது மக்கள் பார்ப்பதற்கு நுழைவு கட்டணம் வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நுழைவு கட்டணத்தை எவ்வளவு வசூலிக்கலாம் என்பது பற்றி அதிகாரிகள் முடிவு செய்து அறிவிக்க உள்ளனர்.

இது தொடர்பாக தோட்டக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறும் போது, “இந்த மலர் கண்காட்சி மாணவர்கள் மற்றும் பொது மக்களை அதிகம் கவரும் வகையில் உருவாக்கப் பட்டு வருகிறது. கலைவாணர் அரங்கின் உள் அரங்கிலேயே கடந்த 2 முறை மலர் கண்காட்சி சென்னையில் நடத்தப் பட்டது.

ஆனால் தற்போது இயற்கை சூழலில் இதனை நடத்த திட்டமிட்டு செம்மொழி பூங்காவை தேர்வு செய்தோம். தற்போது உருவாக்கப்படும் இந்த மலர் கண்காட்சியை நிரந்தரமாக வைத்து பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கலாம் என்று வன ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர். அது போன்று நிரந்தரமாக மலர் கண்காட்சியை செம்மொழி பூங்காவில் நடத்தினால் பொது மக்கள் செம்மொழி பூங்காவுக்கு அதிக அளவில் வருவார்கள் என்றும் தெரிவித்து உள்ளனர்.

### ரூ. 8.16 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூரில்

# நெகிழுரும்பு குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,பிப். 10-

ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் தொகுதி, பெரும்பாக்கம் வடக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிக்கு பிரத்யேக நெகிழுரும்பு குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டது என சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் தொகுதி, பெரும்பாக்கம் வடக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிக்கு பிரத்யேக நெகிழுரும்பு குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகளுக்கு 05.02.2024 அன்று அமைச்சர் பெருமக்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், 400 மி.மீ விட்டமுடைய பிரத்யேக குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் 3.4 கி.மீ நீளத்திற்கு பழைய மாமல்லபுரம் சாலையிலிருந்து பெரும்பாக்கம் வடக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வரை 06.02.2024 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட்டு 24,152 குடியிருப்புகளில் உள்ள 1,00,000 மக்களுக்கு நாளொன்றுக்கு 16.5 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

### கோயம்புத்தூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்

# 3,261 பேருக்கு காப்பீட்டு அட்டை - 1046 பேருக்கு நல உதவிகள்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - மா.சுப்பிரமணியன் வழங்கினர்!

கோவை, பிப்.10

கோயம்புத்தூர் மாவட்டம், டாக்டர்.மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நேற்று (09.02.2024) நடைபெற்ற விழாவில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 3261 பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டைகளையும், 1046 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து, பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தேசிய சுகாதாரத் திட்ட நிதியின் கீழ் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு முதல் தளத்தில் ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை பிரிவை இணைக்கும் வகையில் இணைப்பு சாய்தளத்துடன் கூடிய கட்டடம், பிரதம மந்திரியின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு திட்ட நிதியின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பரிசோதனைக் கூடம் ஆகியவற்றை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்துவைத்தார்.

இவ்விழாவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி.கேத்ரின் சரண்யா, பொதுசுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர், மரு.செல்வவிநாயகம், என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர்.எம்.மாணிக்கம், இணை இயக்குநர், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் மரு.ரவிபாபு, இணை இயக்குநர், (மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.என் என்.ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பு.அருணா, மருத்துவ காப்பீட்டு திட்ட அலுவலர் பாண்டியராஜன், பொள்ளாச்சி நகர்மன்ற தலைவர் திருமதி.என்.சியாமளா நவநீதகிருஷ்ணன், பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.ப.இலட்சுமி, நகர்மன்ற துணைத் தலைவர் கௌதமன், பொள்ளாச்சி அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.இராஜா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி.ரம்யா கருணாகரன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அழகிரிராஜ், மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**அமைச்சர் சு.முத்துசாமி பேச்சு**

முன்னதாக, பழனி கவுண்டர் மேல்நிலைப்பள்ளி MCET வளாகத்தில் தேசிய குடற்புழு நீக்க நாள் முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிபொறுப்பேற்ற இரண்டரை ஆண்டு காலத்தில் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார்கள். மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மலைக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் வீடு தேடி சென்று மருந்துகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. இது போன்று பல்வேறு திட்டங்கள் மக்களுக்கு நேரடியாக பயன் பெற்று வருகின்றன.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு முகாமிலும் சுமார் 300 பயனாளிகளுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. காப்பீட்டு அட்டைகளை எவ்வாறு பெறுவது என்பது குறித்து தெரியாத பல மக்களுக்கு இம்முகாம்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**மக்களுக்கான பயனுள்ள திட்டங்கள்!**

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பான கோரிக்கைகள் மீது 30 நாட்களில் நடவடிக்கை மேற்கொண்டு, அதற்கான தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன. அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு உயர்கல்வி பயில்தற்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தாய்மார்கள் அதிகாலையில் வேலைக்கு செல்வதால், குழந்தைகளுக்கு காலை உணவு கொடுக்க இயலாத சூழ்நிலை உருவாகின்றது.

இதனை கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை உணவு திட்டத்தை கொண்டுவந்துள்ளார். இன்றைக்கு இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் நம்முடைய திட்டங்களை பார்த்து அதே போன்ற திட்டங்களை செயல்படுத்தவேண்டும் என நினைக்கிறார்கள். அந்தளவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்துகின்றார்கள். அவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்கள் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் மக்கள் மீது மிகுந்த அக்கறைகொண்டு, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பேசினார்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு**

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது:-

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது தான் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர்களின் முக்கிய பணியாக இருக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்களின் விருப்பமாக இருக்கின்றது. அதன்படிதான் அனைவரும் தங்களது பணிகளை செவ்வனே ஆற்றி வருகின்றார்கள். அந்த வகையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சி இங்கு நடைபெறுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும், பிப்ரவரி 9ம்நாள் தேசிய குடற்புழு நீக்க நாள் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, பொள்ளாச்சியில் இன்று 1 முதல் 19 வயதிற்குட்பட்ட இளஞ்சிறாருக்கும் , 2030 வயதுள்ள இளம் பெண்களுக்கும் அல்பெண்டாசோல் எனப்படும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 46,138 அரசு பள்ளிகளிலும், 12,201 தனியார் பள்ளிகளிலும், 2109 கல்லூரிகளும், 54,439 அங்கன்வாடி மையங்களிலும் ஆக மொத்தம் 1,14,887 இடங்களில், 5440 அங்கன்வாடி பணியாளர்கள், 12000 சுகாதாரப்பணியாளர்கள், 2650 ஆஷா பணியாளர்கள், 61500 அரசு மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் எனமொத்தம் 1,30,000 பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன்மூலம் 19வயதிற்குட்பட்ட 2.15கோடி சிறார்களும், 2030 வயதிற்குட்பட்ட 54,67000 பேரும் என மொத்தம் 2.69 கோடி பேர் பயன்பெறுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இவ்விழாவில் 3261 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளும், ஆனைமலை தாலுகாவிற்குட்பட்ட ஆட்சிப்பட்டி, செம்பகவுண்டன்புதூர், கே.கே.புதூர் , திவான்சாபுதூர், வாழைகொம்பு நாகூர், புதுகாலனி ஆகிய பகுதிகளை சார்ந்த 400 பயனாளிகளுக்கும், பொள்ளாச்சி தாலுகாவிற்குட்பட்ட பூசாரிபட்டி, சோளபாளையத்தை சார்ந்த 100 பயனாளிகளுக்கும் இ-பட்டாக்களையும், மகளிர் சுயஉதவிகுழுக்களை சார்ந்த 500 பயனாளிகளுக்கு கடன் உதவிகளையும், 46 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களும், என மொத்தம் 4307 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் வழங்கினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ம.கி. அம்பிகாபதி**
**பிப்ரவரி 10 (2004)**



**வடக்கு எல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் மகனான இவர், இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.**

**முப்பது ஆண்டுகள், அரக்கோணம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**“அரக்கோணம் என்றாலே அம்பிகாபதிதான். கழகத்தை ஆலமரமாய் வளர்த்தவர்” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில்! கப்பிவாக்கம் முரசொலி முகவர் - கிராமத் தலைவர்

# கோ.கோபு - எழிலரசி புதிய இல்லத் திறப்பு விழா!

## க. செல்வம் - பனையூர் எம். பாபு - ப.அப்துல் சலீம் - ஆர்.டி. அரசு வாழ்த்து!

செய்யூர்,பிப்.10-

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், எண்.60, கப்பிவாக்கம் கிராமம், எ.கோவிந்தன்அலமேலுஅம்மாள், சுந்தரவள்ளி இவர்களின் மகனும், ஜி.சின்னதம்பி எல்லம்மாள் இவர்களின் மகனும் முரசொலி முகவருமான கோ. கோபு - எழிலரசி இவர்களது இல்லத் திறப்புவிழா 12.02.2024 திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் க. செல்வம் எம்.பி., பனையூர் எம். பாபு எம்.எல்.ஏ., ப.அப்துல் சலீம், ஆர்.டி. அரசு, எஸ்.இனியரசு மாவட்ட அவைத்தலைவர், டி.மோகன்தாஸ் பேரூர் செயலாளர், ஆர்.ரஞ்சித்குமார் பேரூர் துணைச்செயலாளர், சம்யுக்தா அய்யனார், வி.முனுசாமி, பி.ஜெயலட்சுமணன், சி.தயாளன், பெ.பாக்கியராஜ், ச.இளையராஜா, கோட்டீஸ்வரி பாஸ்கர், ந.ராஜ்குமார், புவனேஸ்வரி வேலு, எஸ். பாஸ்கர், க.பா.அன்பரசன், ஆர்.சிவக்குமார், எ.வினோத், எம்.அருணா, பி.சங்கர், சாந்தி முருகேசன், ஆர்.சசிக்குமார், எஸ்.பக்தவச்சலம், எம்.வஜ்ஜிரவேலு, ஜி.விஷ்ணுவரதன், கே.எ.செங்கூட்டுவன், எம்.எச். பக்ரூதின் அலிஅகமது, எல். எஸ்.ரவீந்தரநாத், ஆர்.ராமதாஸ், பி.பாலகிருஷ்ணன், கே.பெரியாண்டவன், எஸ். பாலகிருஷ்ணன், சி.மகா, எ. சங்கர், எஸ்.கலையரசு, எம். தாஸ், என்.கார்த்திகேயன், வி.ஏழுமலை, எ.சிற்றரசு, கே. எஸ்.ஆதிகேசவலு, ஏ.என். பாரத், மு.தமிழினி, இரா.சக்கரை, ச.முருகேசன், ந.முருகன், கே.பூபதி, கே.இ.குமரன், கே.கதிரவன், வெடால் ராமலிங்கம், சாந்தி ரவிக்குமார், பிரேம்சங்கர், சு.க.ஆதவன், கே.அகிலன், பி.இளவரசன், எம்.சசிகலா, இ.அன்பு, டி.குமார், கே.எஸ்.ஜெயராமன், ஜி.வி.பெருமாள், எ.வினாயகமூர்த்தி, எஸ்.சரவணன், எம்.முருகதாஸ், பி.சங்கரலிங்கம் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தொ.மு.ச. நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

எ.கிருஷ்ணமூர்த்திஅன்பிற்கரசி: கோ.பாரத், கோ. சோபியா ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

இ.பரமசிவம், எஸ்.பத்மநாபன், கே.பத்மநாபன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றியம், பாதரிவேடு மாதர்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்று விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மு.மணிபாலன், பா.செ.குணசேகரன், எஸ்.ரமேஷ், எஸ்.ராமஜெயம், பா.முத்துசாமி, சுப்பிரமணி, யேசுரத்திரனம், லாரன்ஸ், சிட்டிபாபு, வடிவேல், எம்.சி.முரளி, சந்திரமோகன் பள்ளி மோலண்மை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.